தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள்,சென்னை – 6

ந.க.எண். 094045/பிசி/14 நாள் .12.2014

பொருள்: பள்ளிக் கல்வி – மேல்நிலைக் கல்வி – UDAAN Scheme – 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு தொழில்நுட்பம், IIT மற்றும் NIT சேர்க்கைக்கு தகுதியின் அடிப்படையில் தேர்ச்சி – இலவச பயிற்சி அளித்தல் – சார்ந்து.

பார்வை: 1) அரசுக் கடிதம் எண்.1(டி)எண். 273, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 12/12/2014.
2)இவ்வியக்கக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 15 .12.2014.

-----------------------

பார்வை (2)ல் காணும் செயல்முறையின் மீது அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் நேரடி தனிக்கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில் இந்திய அரசின் புதிய திட்டமான 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவியர் தரம் வாய்ந்த தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலவும், IIT மற்றும் NIT ஆகிய உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலவும் சேர்க்கை பெறும் வகையில் தகுதித் தேர்வுகளில் போட்டியிட வழிகாட்டி உதவிடும் பொருட்டு மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டமான “உதான் திட்டம்” (UDAAN Scheme) சார்ந்து உரிய விவரங்கள் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பார்வை (2)–ன்படி அனுப்பப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில், தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு / அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி மேல்நிலைப்பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்களில் முதல் இடை பருவத்தேர்வு, இரண்டாம் இடை பருவத்தேர்வு மற்றும் காலாண்டுத் தேர்வு ஆகிய தேர்வுகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவிகளின் விவரங்கள் மற்றும் IIT மற்றும் NIT போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கைப்பெற தகுதித் தேர்வுகள் எழுத விருப்பமுள்ள மாணவிகளின் விவரங்களையும், தொடர்புடைய பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து பெற்று அதன் தொகுப்பறிக்கையினை 22.12.2014க்குள் இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கும், அதன் நகலினை இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கும் அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இது மிகவும் அவசரம்.

இணைப்பு: படிவம்

இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)

பெறுநர்: அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
நகல்: அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
நகல்: அனைத்து மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர்கள்

www.kalvikural.com